ஏற்பாடு செய்யப்படுகிறது. நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்பதால் அண்மையில் ஒரு சேல்ஸ் டெப்போ, விற்பனை நிலையம், காஞ்சீபுரத்தில் திறக்கப்பட்டது. அது நல்ல பலன் தருமானால் அதையொட்டி வேறு பல இடங்களில் அப்படிப்பட்ட விற்பனை நிலையங்களை அரசு திறக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : In fixing the price of yarn, does the Government of India consult the State Government or does it fix it without consulting the State Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அது செய்வது இல்லை. இந்த அரசாங்கத்தின் சிபார்சுகளை மனத்தில் வைத்துக்கொண்டு அந்த அரசு முடிவு செய்யும்.

திரு. எஸ். முருகையன் : நான்கு, ஐந்து மாதங்களாக கூட்டுறவுச் சங்கத்திலே நெசவாளர்களுக்குக் கடன் கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இன்றையதினம் வடார்க்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ 2,000 கைத்தறி நெசவாளர்கள் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக இந்தக் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் கிடைக்கக்கூடிய கடனைக் கொடுத்து அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த இரண்டு திங்கள் இந்தக் கஷ்டம் இருந்தது. பின் ரிசர்வ் பேங்கிடம் எடுத்துத் தெரிவித்த பிறகு அதைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கிறார்கள். இப்பொழுது கடன் வாங்குவதில் தொல்லைகள் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இந்த சர்க்கார், நூல் விலை உயர மத்திய சர்க்கார் குறுக்கிட முடியாத நிலையில் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படக்கூடிய நூலையாவது குறைந்த விலையிலே கொடுப்பதற்காக வேண்டி விரைவில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூல் விலை நிர்ணயம் செய்வது இந்திய சர்க்காரிடம் இருக்கிறது. அந்த வகையில் குறைந்த விலையில் நெசவாளர்களுக்கு கொடுக்க அரசு முயற்சி எடுக்க முடியுமானால் அதை அரசு எடுக்கும்.

Holidays for textile workers

* 250 *Q.*— THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to order observance of compulsory holidays by textile mills in our State; and

(*b*) if so, the number of such compulsory holidays in a week?

1967 ஜூலை 11]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மத்திய அரசு இந்தியாவிலுள்ள நூற்பு ஆலை, நெசவு ஆலைகளில் கட்டாய விடுமுறை திட்டத்தை அனுசரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) மத்திய அரசு பஞ்சு பற்றாக்குறையை முன்னிட்டு நாட்டிலுள்ள எல்லா நூற்பு-நெசவு ஆலைகள் சாதாரண வார விடுமுறை நாட்கள் தவிர கட்டாய விடுமுறை ஒருநாள் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. பிறகு மேற்படி கட்டாய விடுமுறை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கொடுத்தால் போதும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

THIRU K. VINAYAKAM : After the declaration of these compulsory holidays for these textile mills, has the position improved and is cotton available now so that the compulsory holidays need not be enforced again?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலே வாரத்திற்கு ஒரு நாள் கட்டாய விடுமுறை தர வேண்டுமென்று இருந்தது. கொஞ்சம் நிலை சீரான பிறகு இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கட்டாய விடுமுறை தர வேண்டுமென்ற காரணத்தால் அதையும் தளர்த்த வேண்டுமென்று இந்த அரசு தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இறக்குமதி பஞ்சின் அளவு உயருமானால் அதைப் பரிசீலிக்கலாம் என்று மத்திய சர்க்கார் சொல்லி இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இம்மாதிரியான கட்டாய விடுமுறை நாட்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? அல்லது, சம்பளத்தில் ஏதேனும் குறைத்துக் கொடுக்கப்படுகிறதா? மு.ப. பகல் 9-30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

திரு. பி. வேலுசாமி : ஐயா, இந்தக் கட்டாய 'லே-அப்' கொடுப்பதன் மூலமாக, தொழிலாளிகள் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருக்கிற சம்பளங்களில் குறைவாகக் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு வளர்ந்து கொண்டிருக்கின்றதே, அதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய நிலைமைகளை ஆராய்ந்து, அதில் இருக்கும் கஷ்டங்களை எல்லோருமே பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான், அது கருதப்படுகிறது. எந்த வகையில் அந்தக் கஷ்டங்களை நீக்க முடியும் என்பதையும் ஆராய்ந்து, தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

THIRU T. MARTIN : Sir, scarcity of cotton being the reason for this closure, may I request the Hon. Minister to consider the issue of incentive bonus to cotton producers in the State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய உத்தேசம் இப்பொழுது இல்லை. இனிமேல்தான் ஆராயப்பட வேண்டும்.